**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **41**

| | | | |
|---|---|---|---|
| Name: | இசக்கி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A2, A6, A8,A11, A15, A17, A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 30.03.2023**

முதல் விசாரணை

நான் தென்காசி மேலப்புலியூர், சிதம்பரேஸ்வரர் கோவில் தெருவில் குடும்பத்துடன் குடியிருக்கிறேன். தென்காசி கூலக்கடை பஜாரில் கிழமேல் ரோட்டில் வடக்கு பார்த்து எண்ணெய் கடை வைத்துள்ளேன். என் கடைக்கு பக்கத்தில் பெரிய கடைகள் உள்ளது. அந்த கடைக்கு பக்கத்தில் வேறு யாரும் நின்று பேசுவார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்தாரம்மன் கோவில் பக்கம் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஒரு பிரச்சனை நடந்தது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளை தெரியாது.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 14.08.2007 அன்று என் கடைக்கு எதிர்புறம் V.T.S.R பலசரக்குக்கடை உள்ளது என்றும் அந்த பலசரக்கு கடைக்கு கடந்த

பத்து நாளாக தென்காசி த.மு.மு.க கட்சியைச்சேர்ந்த ஹனிபா என்ற நாகூர்ஹனிபா மற்றும் அவர் தம்பி அலாவுதீன், அப்துல்லா (எ) முருகேசன் மற்றும் அவர்கள் கூட்டாளிகளும் இரவு 9.00 மணிக்கு மேல் இரண்டு, மூன்று பேராக சேர்த்து வந்து, V.T.S.R- உடனும் ஹாஜிமுஸ்தபா ஜவுளிக்கடையின் உரிமையாளர் கமாலுடனும் சேர்ந்து பேசிக்கொண்டு போவார்கள் என்றும் அவங்க பேசுவது சாதாரணமாக பேசுவது மாதிரி இருக்காது என்றும் ஏதோ ஒரு காரியத்தை முடிக்கப் பேசுவது மாதிரியே பேசிவிட்டு போவார்கள் என்றும் பின்னர் ஒரு வாரத்திலேயே 14.08.2007 ம் தேதி காலையில் 10.15 மணிக்கு இரண்டு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் ஆயுதங்களால் வெட்டி குத்திக்கொண்டு நடந்த அசம்பாவிதத்துக்கு காரணம் V.T.S.R-ம், கமாலும் சேர்ந்து விடலைப்பசங்களை ஏவிவிட்ட நோக்கம் புரிஞ்சதாகவும் இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது மேற்சொன்ன சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தென்காசி பகுதிகளில் காலி டின்களை எடுத்து எண்ணெய் மில்லுக்கு சப்ளை செய்து வேலை செய்வேன். அதனால் தென்காசியில் உள்ள பலசரக்கு கடைகள் அனைத்தையும் தெரியும். எனக்கு தொழில் செய்த வகையில் தென்காசியில் உள்ள ஒவ்வொரு ஆட்களையும் தெரியும் என்றும் ஆனால் வேண்டும் என்றே எதிரிகளை தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**